DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.17

Name : கோதண்டராமன்

Father's Name : ராஜகோபால்

Age : 75

Address :

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 19th day of September, 2025.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் 31.07.1982 ம் வருடம் சென்னை மத்திய சிறையில் இரண்டாம் நிலைக்காவலராக பணியில் சேர்ந்தேன். 31.12.2022 அன்று புழல் மத்திய சிறை – I ல் உதவி ஜெயிலராக ஓய்வு பெற்றேன். 15.01.2012 அன்று புழல் மத்திய சிறை – I ல் உதவி ஜெயிலராக பணிபுரிந்த போது இரவு 8.00 மணியளவில் நித்யா என்ற நித்யராஜ் என்பவரை சிறையில் அனுமதிப்பதற்காக போலீசார் அழைத்து வந்தார்கள். சிறைவாசிக்கு வயிறு மற்றும் கைகளில் காயம் இருந்தது. சிறையில் அனுமதிக்க வரும்போதே அவரால் நடக்க முடியவில்லை. இரண்டு காவலர்கள் அவரை தாங்கி பிடித்து அழைத்து வந்தார்கள். அவரை சிறையில் அனுமதிக்க முடியாது என்பதால் சிறை மருத்துவரை அழைத்து அவரை பரிசோதிக்க சொன்னேன். மருத்துவர் வந்து பரிசோதித்துவிட்டு இன்று ஒருநாள் மட்டும் சிறை மருத்துவமனையில் வைக்கலாம் என்றும், மறுநாள் வெளி மருத்துவமனைக்கு அனுப்பிவிடலாம் என்றும் கூறினார், அதன் அடிப்படையில் அவரை சிறையில் அனுமதித்தோம். என்னிடம் காட்டப்படும்

சிறை அனுமதி பதிவேட்டில் நித்யா என்ற நித்யராஜை இரவு 8 மணிக்கு அனுமதித்துள்ளோம், அந்த அந்த சிறை அனுமதி பதிவேட்டின் Extract **அ.சா.ஆ.10**. அன்றிரவே நான் ஆய்விற்கு சென்று பாரா புத்தகத்திலும் கையொப்பமிட்டுள்ளேன், அந்த பாரா புத்தகத்தின் Extract **அ.சா.ஆ.11**. மறுநாள் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி உள்ளார்கள், அவர் போகும் முன்னே இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக என்னை CBCID போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

14ம் தேதி நித்யா என்ற நித்யராஜை சிறையில் அனுமதித்த விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் அது போன்ற கைதி வந்ததாகவும் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சொன்னார்கள். நான் 14ந் தேதியன்று பதிவேட்டில்(அ.சா.ஆ.10) கையொப்பமிட்டேன் என்று சொன்னால் தவறு, அ.சா.ஆ.10 ல் என்னுடைய கையொப்பம் இல்லை. அ.சா.ஆ.11ல் உள்ள கையெழுத்து பாரா காவலர் துரைசாமியுடையது, நான் என் கையொப்பத்திற்கு கீழே தேதி போடவில்லை என்றால் அந்த பதிவேட்டிலேயே தேதி இருப்பதால் நான் போடவில்லை.

**மறுவிசாரணை** :– இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.18

| | |
|---|---|
| Name | : திவாகர் ஜேசுதாஸ் |
| Father's Name | : சாந்தராஜ் |
| Age | : 49 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 18th day of September, 2025.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, சிறைகள் மற்றும் சீர்திருத்த பள்ளிகள் துறை தலைமையிடம் சென்னையில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 16.01.2012 அன்று புழல் மத்திய சிறை –II ஆண் செவிலியர் உதவியாளராக பணிபுரிந்த போது காலை 8 மணிக்கு மணவாளன் என்பவரை நான் பணியிலிருந்து விடுவித்து அனுப்பினேன். காலை 11 மணியளவில் சிறைவாசி நித்யா என்ற நித்யராஜ் தனக்கு முடியவில்லை என்று கூறியதால் டாக்டர்.கௌரிசங்கர் வந்து பார்த்தார், சிறைவாசி தான் கழிப்பறைக்கு செல்லவேண்டும் என்று கூறினார், அப்போது அவரின் துணைக்கு இரண்டு சிறைவாசிகளை அனுப்பி வைத்தேன். மதியம் 1 மணியளவில் சிறைவாசிக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. டாக்டர். கௌரிசங்கர் அவருக்கு சிகிச்சையளித்தார், சிறைவாசி மயக்கமானதும்

மருத்துவர் உடனடியாக ஆம்புலன்ஸில் ஏற்றி ராயப்பேட்டை மருத்துவமனைக்கு அனுப்பும்படி கூறினார். அது போன்று நான் காவலர்கள் சின்னசாமி, தங்கராஜ், ஆல்பின் ஆகியவர்களோடு அனுப்பி வைத்தேன். பின்னர், சிறைவாசி இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக CBCID போலீசார்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

டாக்டர்.கௌரிசங்கர், சிறைவாசி நித்யா என்ற நித்யராஜை பரிசோதித்த போது அவருக்கு நாடித்துடிப்பு, இதயத்துடிப்பு இல்லை என்றாலும் அவருக்கு CPR கொடுத்துதான் அவரை Revive செய்தார்கள் என்றால் சரியல்ல, சிறை மருத்துவமனையில் CPR Machine இல்லை. கைகள் மூலம் மருத்துவர் CPR சிகிச்சை அளித்தாரா என்பது குறித்து எனக்கு நினைவில்லை. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான், மருத்துவர் தீவிர சிகிச்சை (CPR) அளித்ததாக கூறியுள்ளேன் என்றால் இருக்கலாம், தற்போது நினைவில்லை.

**மறுவிசாரணை** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |